

தனி பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## 2008 - ஆகஸ்ட்

ஆசிரியர்
அர்ஜூனன்

மரம் 8
கனி 9

## நான் கிறிஸ்தவத்தைக் குறித்து அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா?
## *Am I Serious About Christianity?*

★ என்னுடைய ஜீவியம் தேவனை மகிமைப்படுத்தி மற்றவர்களும் தேவனை மகிமைப்படுத்த காரணமாயிருக்கிறதா (மத்.5:13-16) அல்லது நான் அவரை வெட்கப்படுத்துகிறேனா?

★ நான் தேவனுடைய ஊழியக்காரியாயிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேனா (பிலி.3:1; 4:4) அல்லது நான் செய்கிற ஊழியத்தைக் குறித்து ஆத்திரமடைகிறேனா?

★ நான் என்னுடைய சத்துருவைக்கூட நேசிக்கிறேனா (மத்.5:44)?

★ நான் ஒரு அநுதின வேதவாசிக்கிறவளாக, தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்வது பற்றி அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா (அப்.17:11)?

★ என்னுடைய ஜெபஜீவியம் தேவனிலுள்ள என்னுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறதா (மத்.6:5-15)?

★ நான் இயேசுவுக்காக ஒரு ஆத்துமாவையாவது எப்போதாவது ஆதாயம் செய்திருக்கிறேனா (2தீமோ.2:2)?


★ நான் யாருக்காவது சுவிசேஷத்தை போதித்து அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேனா (தீத்.2:11-15)?

★ நான் பாவங்களுக்காக மனந்திரும்பி நம்முடைய கிறிஸ்துவுக்கு விரோதமான மனநிலைகளையும் கிரியைகளையும் சரிசெய்ய மனமுள்ளவளாயிருக்கிறேனா (அப்.17:30,31)?


-மாற்கு ஷெர்ஃபீல்டு
The Voice of Truth International

**கிறிஸ்துவின் வசன மாத இதழ்**

தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பவும்.



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202
S.INDIA



"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8    ஆகஸ்ட் - 2008    கனி - 9


ஆசிரியருரை

# சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது

## All things work together for good



**யா**ருக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது? துன்மார்க்கருக்கு என்று நீங்கள் சொல்லுவீர்கள். அப்படியல்ல, பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” என்கிறார் (ரோ.8:28). இதை தன்னுடைய வாழ்வில் அனுபவித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒரு முறை அவர் கப்பல் பயணத்தில் கட்டுண்டவராக இருந்தபோது இருநூற்றெழுபத்தாறு பேரை நோக்கி: “அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப்புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று, பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக

நிற்கவேண்டும் இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்" (அப்.27:20-24). பவுலின் வாழ்க்கையில் கப்பற்சேதத்தில் வந்த பாடுகள் அவனுடைய வாழ்க்கையில் நன்மைக்கு ஏதுவாக நடந்ததுமல்லாமல் அவனுடனேகூட கப்பற்பயணத்தின்போது யாத்திரை பண்ணின அனைவரையும் தப்புவித்தார். இப்படிப்பட்ட சம்பவங்கள் அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நடந்தேறுகிறது.

**சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கவேண்டுமானால் நாம் முதலாவது அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.** பேதுரு மற்றும் யாக்கோபு, யோவான் இவர்களை தம்முடைய ஊழியத்திற்கு கர்த்தர் அழைக்கும்போது அவர்கள் மீன்பிடிக்கிறவர்களாக இருந்தனர். "இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக்.5:10,11). அந்தப்படியாக எல்லோருமே சுவிசேஷத்தினால் அழைக்கப் படுகிறார்கள். பேதுரு, யாக்கோபு, யோவான் போன்றோர் அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள். ஒருவேளை நீங்கள் ஒரு விசுவாசியாக அழைக்கப்பட்டிருக்கலாம். எல்லோருமே நித்தியமான வாழ்வுக்கு அழைக்கப்படுகிறோம் என்பது உண்மை. அப்படி அழைக்கப்பட்டவர்களில் ஞானிகள் இல்லை, கல்விமான்கள் இல்லை. சிலர் எனக்கு கல்வி அறிவு இல்லை, பணவசதியில்லை என்று சாக்குபோக்கு சொல்லுகின்றனர்.

பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" என்று எழுதுகிறார் (1கொரி.1:26,27). மேலும், பவுல் எழுதும் கடிதங்களிலே "தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்ட வனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட வர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது" என்று எழுதுகிறார் (1கொரி.1:1,2). அழைக்கப் பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். நீங்கள்

பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக இருப்பீர்களென்றால் உங்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்துகொள்ளுங்கள். ஆபிரகாம் தான் அழைக்கப்பட்டபோது சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்து தன் தேசம், இனம், தகப்பனுடைய வீடு இவை எல்லாவற்றையும் விட்டு தேவன் அழைத்த இடத்திற்கு கடந்து சென்றான்.

**மேலும், பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்கிறார்.** உங்களுடைய அன்பு எத்தகையது? அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று 1யோவான்4:8-ல் வாசிக்கிறோம். நம்முடைய கர்த்தரும் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என்கிறார் (மாற்.12:30). உங்களுடைய அன்பு இப்படிப்பட்டதாக இருக்கிறதா? "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவா.2:15). நாம் தேவனிடத்தில் அன்புகூரும்போது சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறும்.

அழைக்கப்பட்ட பேதுரு மீண்டும் மீன்பிடி வேலைக்குச் சென்றான் கர்த்தர் அவனை சந்தித்து; "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்" (யோவா.21:15). அன்பாக இருந்தால் என்ன செய்யவேண்டும் அழைக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும். இங்கே பேதுரு தாம் விட்டுவந்த வேலைக்கே சென்றான். அந்த வேளையில் அவனை மீண்டும் கர்த்தர் சந்தித்து என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று கேட்டு என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். நீங்கள் தேவனிடத்தில் அன்புள்ளவர்களாக இருந்தால் அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, முதலாவது அதன்படி செய்யுங்கள். இதுவே அவரில் நீங்கள் அன்பு கூருகிறதற்கான அடையாளம். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தபடியால் அவனை ஆசீர்வதிக்கும்போது; "நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச்

சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆதி.22:16-18). முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்பு கூர்ந்த ஆபிரகாம் தன் குமாரனை தேவனுக்கு கொடுக்க தாமதம் பண்ணவில்லை. ஆகையால் திரும்பவும் பாவனையாக பெற்றான்.


சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெற ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். தேவன் சகலத்தையும் சிருஷ்டித்து அது நல்லது என்று கண்டார் என ஆதியாகம புத்தகத்தில் படிக்கிறோம். சகலத்தையும் மனிதனுடைய நன்மைக்காகவே படைத்தார். கசப்பான பாவற்காயையும், இனிப்பான கரும்பையும் தேவன் படைத்தார். இவை இரண்டுமே மனிதனுக்கு தேவையான ஒன்றுதான். இதில் பாவக்காய் தேவை இல்லை என்று ஒரு மனிதன் ஒதுக்கமுடியாது. இரண்டுமே அவன் சாப்பிடுவதால் உடல் நலம் பெறுகிறான். தேவன் மனிதனுக்கு நலமானவைகளை ஏற்படுத்தியிருக்கிறார் என்று அறிகிறோம். ஆனால் தேவனால் உண்டாகாமல் உலகத்தில் உண்டான சிலவற்றை அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியிருக்கிறார். அது என்னவென்றால் "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினா லுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டா னவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா.2:16,17). யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி இஸ்மவேலரிடத்தில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவனோ தேவனுடைய இரக்கத்தினால் எகிப்திலே உயர்த்தப்பட்டான். பஞ்சகாலத்தில் தானியங்கொள்ளவந்த தன் சகோதரர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு விரோதமாக செய்யாமல், "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான் (ஆதி.50:20).

அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கும் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது. "நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுகாலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்" என்கிறார் தாவீது (சங்.37:39). உங்களுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெற சுவிசேஷத்தினால் அழைத்த அவரை ஏற்றுக்கொண்டு அவரில் அன்புகூருங்கள். அப்பொழுது உங்களுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

# சபையின் அமைப்பு

# Organizatin of the Church

*-J.C.Choate*



சபையானது அழைக்கப்பட்டவர்களாலும், இரட்சிக்கப் பட்டவர்களாலும், உலக வழிகளை விட்டு விட தீர்மானித்திருக்கிறவர்களாலும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறவர்களாலும் உருவாக்கப் பட்டுள்ளது. இது தன் நோக்கத்தில் சர்வதேச அளவிலும், உலக அளவிலும் அமைந்துள்ளது. கிறிஸ்து தம்முடைய சபையை தாம் கட்டப்போவதாகக் கூறினார் (மத்.16:18). மேலும் சபை உலகத்தில் எவ்விடத்திலும்,எங்கும் இருக்கிறது. சபையார் கூட்ட அமைப்பால் உள்ளூரிலும் சபை இருக்கிறது. வேதாகமம் கொரிந்து, தெசலோனிக்கேய, கொலோசெய போன்ற பல பட்டணங்களில் கூடிவந்த சபையைக் குறித்து பேசுகிறது (1கொரி.1:1,2; 1தெச.1:1,2; கொலோ.1). ஒருவர் உள்ளூர் சபை அங்கத்தினராக இருக்கலாம் ஆனால் அவர் உலகம் முழுவதும் எங்குசென்றாலும் அவர் உலகளாவிய சபையின் அங்கத்தினராகவுமிருக்கிறார்.

சபை தனிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது தேவன் ஏற்படுத்தின நோக்கத்திற்காக ஊழியஞ்செய்யக் கூடியதாயிருந்தால் இது பணிசெய்யும் ஒரு அமைப்பிற்குள்ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். இதன் தலைவர் கிறிஸ்துவே, அவர் இந்த அதிகாரத்தை எந்த ஒரு மனிதனோடும் பங்கிட்டுக் கொள்ளுகிறதில்லை. பவுல் கிறிஸ்துவைக் குறித்து, “அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்” (கொலோ1:18)எனக் கூறினார். பவுல் மேலும் எபேசு சபைக்கு, “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்” (எபே.1:22,23)எனக் கூறுகிறார்.

சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து பரலோகத்திலே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவரே சபையின் தலைவராக இருக்கிறார். சபை ஏதாவது “தலைமை ஸ்தாபனங்களை” பெற்றிருக்குமானால் பிறகு நாம்

இது தமது தலைவர் இருக்கிறதான பரலோகத்தில் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்திருப்போம். "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோ.3:1)என வாசிக்கிறோம். எபிரெயர்1:3-ம் இதையே போதிக்கிறது. ஆனால் உலக அளவில் சபையைக்குறித்த காரியம் என்ன? கிறிஸ்து தலையாயிருப்பதைத் தவிர உலகளாவிய அமைப்பினை சபை பெற்றிருக்க வில்லை. உள்ளூரில் சபை அங்கத்தினர்கள் சபைக்குள் குழுவாக இருக்கின்றனர், மேலும் ஒவ்வொரு சபையும் சுயமாக செயல்படுகின்றது,மேலும் இது சுயாட்சி செய்கிறது. கிறிஸ்து உள்ளூர் சபையின் தலைவராக இருக்கின்றார், அவரே தம்முடைய புதிய ஏற்பாட்டு வார்த்தையின் அதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்கின்றார், சபையின் மனிதர் வேதவாக்கியங்களினால் வழிநடத்தப்படுகிறவர்களாக கிறிஸ்துவின் அதிகாரத்தை பூர்த்திசெய்யும் படிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்புடையவர் களாகயிருக்கிறார்கள். அவர்கள் போதிக்கின்றவர்களாகவும், உபதேசிக்கின்றவர்களாகவும், தரும காரியங்களையும் சபையின் சுவிசேஷப் பணியையும் திட்டமிடுகிறவர்களாகவுமிருக்க வேண்டும். மேலும் ஸ்திரீகள் மற்ற ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டியது அவசியம், ஸ்திரீகளால் பல்வேறு தரும காரியங்களையும் அந்நியரை உபசரிக்கும்பணிகளையும் மிகச்சிறப்பாக கையாள வேண்டியதும் அவசியம். மனிதரும் கூட சபைக்குரிய எந்த வேலையையும் செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்களாலும், ஆவியினாலும் வளர்கிறது போல, தகுதிவாய்ந்த முதிர்ச்சியடைந்த மனுஷர் மத்தியிலிருந்து மூப்பர்களும் உதவிக்காரர்களும், சபையின் 'மேய்ப்பர்கள்' மற்றும் 'ஊழியர்கள்' போல செயல்படுவதற்கு நியமிக்கபடும் நிலையை சபை அடையவேண்டும். அங்கு இரண்டு அல்லது அதற்கு மேலான மூப்பர்களும், இரண்டு அல்லது அதற்கு மேலான உதவிக்காரர்களும் நியமிக்கப்பட்டு தங்களுடன் ஐக்கியமாகும் அங்கத்தினர்களால் அறிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இந்த மனுஷர் வேதவாக்கியங்களில் கோடிட்டு காட்டப்பட்ட குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் (1தீமோ.3; தீத்து1).

மூப்பர்கள் (பாஸ்டர்கள், பிஷப்கள், பிரஷ்பிடர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் கூட அழைக்கப்படுகின்றனர்) மந்தையை வழி நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்கள். உதவிக்காரர்களும் கூட பணிவிடைக்காரர்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் மேலும் அவர்கள் மூப்பர்களுக்கு சபை

பணிகளில் உதவிக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வழக்கமாக சபைப்பொருட்கள் அல்லது சபையின் சரீரதேவைகளை கவனிக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

சபையில் மிக உயர்ந்த பணி உள்ளூர் சபையில் மூப்பர்களில் ஒருவராக ஊழியஞ்செய்வதேயாகும். கர்த்தர் சபையின் தனிப்பட்ட ஒரு ஆண் அங்கத்தினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளின் மேல் ஆளுகை செலுத்துபவராக ஊழியஞ்செய்ய சித்தங்கொள்ளவில்லை. ஆனபடியால், அவர் ஒரு சபையில் இருக்கும் மூப்பர்களில் ஒருவரை போலிருக்க ஒரு மூப்பரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். மூப்பராக இருக்கிறவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு இணைந்து சபைப்பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் பவுல் பட்டியலிட்டி ருக்கிற தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும். அத்தோடுகூட கர்த்தருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு மூப்பர்கள் தங்களுக்குள்ளேயும் உள்ளூர் சபை அங்கத்தினர்களோடும் கூட இணைந்து ஊழியஞ்செய்ய கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஆடுகளை மேய்ப்பது (அப். 20:28) அல்லது சபையின் ஆவிக்குரிய போஜனத்திற்கு கொடுத்துதவுவது மூப்பர்களுடைய வேலையாயிருக்கிறது. அவர்கள் கள்ள உபதேசத்திற்கு அவைகளை விலக்கிக் காத்து பக்தியற்றவர்களையும் அவிசுவாசமுள்ள சபை அங்கத்தினர்களையும் ஒழுங்குப்படுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

உள்ளூர் சபை போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் எல்லா அங்கத்தினர்களும் உண்மையாகவே கர்த்தருடைய ஊழியக்காரர்களாயிருப்பது அவசியம். ஆராதிக்கும்படிக்கு ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதினால் அங்கு ஒற்றுமையிருக்க வேண்டும். அவர்கள் இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுப்பதில் பிரசங்கியாகவுமிருக்க வேண்டும். சபையிலும் சமுதாயத்திலும் தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்வதில் இரக்கம் காட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களைக் கொண்ட ஒரு சபை வளர்ச்சியடைகிறதாகவும், ஆவிக்குரியதாகவும், பிரசங்கிக்கிறதாகவும், விசுவாசமிக்கதாகவுமிருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது சபை கிறிஸ்தவம் என்பது என்ன என்பதையும், சபை தம்முடைய அங்கத்தினர்களோடு ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருப்பதையும், ஆத்தும பாரம் கொண்டிருப்பதையும் இழந்துபோனதை இரட்சிக்கவும் ஒரு நல்மாதிரியைக் கொண்டிருப்பதையும் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து கனப்படுத்துகிறதையும் மெய்ப்பிக்கிறதாயிருக்கிறது. இது ஒழுங்குப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சபையாகும்.

# நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன்
# I Will Just Follow The Religion of my Parents



*-Betty*

இன்று உலகில் வேறுபட்ட மதங்களை கிறிஸ்தவ சமயம், யூதசமயம், இந்துமதம், புத்தமதம், இஸ்லாமிய மதம், டாவோயிசம், ஜொராஸ்டரேனிசம், கத்தோலிக்க சமயம், பிராட்டஸ்டண்டு – என காண்கின்ற வேளையில் இவற்றில் எதைப் பின்பற்றுவது என்ற எண்ணம் முழுவதும் நசுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு தெய்வங்களை, வெவ்வேறு மதசாஸ்திரங்களை, வேறுபட்ட ஆராதனை முறைமைகளை, ஒருவனுடைய வாழ்வின் பாவ பரிகாரத்திற்கு வேறுபட்ட வழிகளைக் காட்டுகிறது. எவ்வாறு ஒரு மனிதன் எந்த சமயம் தேவனிடத்திலிருந்து வந்தது, எது சத்தியத்தை மறைத்து வைப்பதற்கு சாத்தானால் உருவாக்கப்பட்ட போலியானது என்பதை அறிய முடியும்?

இந்த குழப்பமான கேள்விகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் படிக்கு, அதிகமான ஜனங்கள் " நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன். அவர்களுக்கு எவையெல்லாம் நல்லதாகயிருந்ததோ அவைகள் எனக்கும் நல்லதாகவேயிருக்கும் " எனத் தீர்மானிக்கின்றனர்.

ஆனால், ஒருவருடைய பெற்றோர் பின்பற்றுகின்ற ஏதோஒன்றோடு திருப்தியாயிருக்க அது பாதுகாப்பானதா? சத்தியத்தை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காதபடிக்கு அவர்களுடைய பெற்றோர் மற்றும் பெற்றோருடைய பெற்றோர் பின்பற்றினவைகளையும் கூட பின்பற்றுவது தவறானதாக இருக்காதா?

ஆபிரகாமுடைய தகப்பனும் அவனுடைய தாத்தாவும் விக்கிரகாராதனை செய்தார்கள் என வேதாகமத்தில் நாம் காண்கிறோம், ஆனால் ஆபிரகாம் பரலோகத்தின் தேவனை ஆராதித்து சேவிக்கும்படிக்கு குடும்ப சமய சடங்குகளை விட்டு விலகினான் ( யோசு. 24:2). இன்னொரு எடுத்துக்காட்டு, அப்போஸ்தலனாகிய பவுலும் கூட விலகினான். அவன் அப்போஸ்தலர் 2 3:1 ல் " சகோதாரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்" மேலும் மெய்யாகவே, நானும் நசரேயனாகிய, இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் ( அப்.26:9) என்றான். ஆனால், அவன் தன்னுடைய பிதாக்களின் மார்க்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவராகிய மேசியாவாகிய கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி வந்தது என்று கற்றுக்

கொண்டபோது, அவன் யூதசமயத்தை விட்டு விலகி கிறிஸ்தவனாக மாறினான்.

நீதிமொழிகள் 14:12 "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று எச்சரிக்கிறது. நாம் ஒவ்வொருவரும் தனித்தனியான ஆத்மாவாகவும், நாம் வாழும் வாழ்க்கை முறைக்கு தேவனுக்கு உத்தரவாதியாகவும் இருக்கிறோம். அநேகர் வீணாக சில மத அமைப்புகளைப் பின்பற்றும்படிக்கு, அந்த நம்பிக்கைக்குள்ளாக தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கின்றபோது இது போதுமானதல்ல. இயேசு நியாயத்தீர்ப்பின் நாளிலே, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" என்றார். அடுத்த வசனம் "...நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி **செய்கிறவன்** எவனோ..." என்ற கூற்றுடன் ஆரம்பிக்கிறது.

நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது" *(2 தீமோ.3:16,17)* என போதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஏனென்றால் வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது மேலும் இது தேவபக்திக்கடுத்த எல்லா விஷயங்களிலும் நம்மை வழிநடத்த உத்தேசிக்கிறது, நாம் உந்தப்படுகிறோம், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" *(2 தீமோ.2:15).*

இப்பகுதிகளிலிருந்து, நாம் நம்முடைய முற்பிதாக்களின் சமயத்தை குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதற்கு இடம்கொடுக்கக்கூடாது எனக்காண்கிறோம், ஏனென்றால் அவர்கள் ஒருவேளை தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைக்கூட பின்பற்றிக்கொண்டிருந்திருக்கலாம். மாறாக, நாம் நம்முடைய ஆத்துமநன்மைக்காகவே போதுமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய மாதிரியின் மூலம் நம்முடைய சந்ததியின் ஆத்துமாக்களும் பல்வகைப்பட்ட சமயங்களையும் புனிதநூல்களையும் நமக்காக படிப்பதற்கு முற்படுவார்கள். நாம் சத்தியத்தை தேடவேண்டும், அதைக்கண்டு பிடிக்கும்போது, குடும்பப் பாரம்பரியங்களையும் மத

நம்பிக்கைகளையும் விட்டு விலக வேண்டியிருந்தாலும்கூட சத்தியத்தைப்பின்பற்றும்படிக்கு தைரியம் கொண்டிருப்போம்.

இயேசு சத்தியத்தை தேடுவது சம்பந்தமாக இந்த உவமையைக் கூறினார்:''...பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது, அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்''*(மத்.13:45,46)*. இந்த மனிதன் விலையுயர்ந்த முத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கு தனக்குண்டான எல்லாவற்றையும் விற்றுவிட்டான். சத்தியம் முத்தைக் காட்டிலும் விலையுயர்ந்தது, மேலும் நாம் நமக்காக சமய சத்தியத்தைக் கொள்ளும்படிக்கு எதையும் இழக்கவும் தேவையான எந்த மாற்றத்தையும் உருவாக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்முடைய பெற்றொர்கள் நம்பி பின்பற்றின சமயம் அவர்களுடைய சுய அறிவுக்கேற்றபடியும் சந்தர்ப்பத்திற்கேற்றபடியும் காணப்பட்டது. ஒருவேளை அவர்கள் சரியாக இருந்திருக்கலாம் ஆனால், அவர்கள் தவறானதைத் தெரிந்து கொண்டார்கள், நாம், தனித்த ஆத்துமாக்களாக, நமக்கு முன்பாக கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படிக்கு இடங்கொடுக்க முடியாது.உண்மையான உறுதியான ஆராய்ச்சியோடு, தேவனுடைய சத்தியத்தைக் கண்டுகொள்ளும்படிக்கு தேவனுடைய உதவிக்காக ஜெபத்துடன் இணைந்து, நாம் தவறானவற்றிலிருந்து சத்தியத்தை பகுத்துணர்ந்து கொள்ள முடியும். தேவனை நோக்கி நமக்காகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்திற்கு அர்ப்பணிக்கும்படிக்கு இது நம்முடைய கடமையாயிருக்கிறது.

நீங்கள் இது தேவனுடைய சத்தியம் என உறுதிசெய்து கொள்ளுவதற்கு ஆராய்ந்து பார்க்காமலே உங்களுடைய பெற்றோரின் சமயத்தைப் பின்பற்றுவதுடன் திருப்தியடைய தீர்மானித்திருப்பீர்களானால், உங்களுடைய ஆத்துமாவின் நித்திய நன்மையை இழந்து கொண்டிருக்கிறீர்கள். **திரும்பிச் சென்று மீண்டும் இந்த ஐயப்பாட்டினை மறு ஆய்வு** செய்யுங்கள். சத்தியத்தின் மூலம் ஞானம்பெற சரியான நிலையை உருவாக்குங்கள்.


**ஜெபியுங்கள்**



- ✦தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களிலும் கிறிஸ்துவின் வசனம் வாசகர் கருத்தரங்கு நடத்த கர்த்தர் கிருபைசெய்தபடியால் ......
- ✦கர்த்தருக்குச் சித்தமானால் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள கூட்டங்களுக்காக .....
- ✦டெலிவிஷன், வானொலி மற்றும் மாத இதழ் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஊக்கமாக .....

# தாய் - Mother

-Glory Arjunan



"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாது பற்றிக்கொள்ளுவான்" என வேதம் கூறுகிறது (நீதி.22:6). உங்கள் பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்தினீர்களா? உங்கள் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய வார்த்தையை கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக் கிறபோதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும் எழுந்திருக்கும் போதும் அவைகளைக் குறித்துப் பேசினீர்களா? (உபா.6:7). இல்லையென்றால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதைக் கேளுங்கள், "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; ...அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது (எசேக்.18:4). எனவே கர்த்தருக்குரியவர்களை அவருடைய சித்தத்திற்கு ஒப்படையுங்கள். அப்படியாக ஒப்படைத்து தேவ ஆசீர்வாதம் பெற்ற சில தாய்மார்களைப் பற்றி தியானிப்போம்.

**அன்னாள் ஒரு அருமையான தாய்.** பிள்ளையில்லை என்ற காரணத்தால் மற்றவர்களால் விசனப்படுத்தப்பட்டவளாய் கர்த்தருடைய சமூகத்தில் மனங்கசந்து அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி; சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; ...என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1சாமு.1:11). அந்தப்படியே அவள் ஒரு குமாரனைப் பெற்று, "....அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்" (1சாமு.1:28). தான் வெகுவாய் சிறுமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அநேக நாட்களுக்குப் பின் பிறந்த பிள்ளையை நான் எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பது என்று தயங்கினாளா? இல்லை தேவனுக்குரியதை தேவனுக்கென்று கொடுத்தாள். 'சாமுவேல்' என்ற பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் (1சாமு.2:26). அன்பான தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகள் இவ்விதமாய் நடந்து கொள்ளுகின்றார்களா?

**பாருங்கள், மனோவாவின் மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள்.** "கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரிக்கு தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார் (நியா.13:3). இதை அறிந்த இந்த தம்பதியாரோ, பிள்ளை பிறக்கும் முன்பே அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்றெல்லாம் கேட்டறிந்து கர்த்தருக்குப் பிரியமாய் செயல்பட முற்பட்டனர். கர்த்தருடைய சுதந்திரமாகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்த வேண்டும் என்று அறிந்திருக்கிறீர்களா? இல்லை, அதிசயமாய் கிடைத்த என் பிள்ளை உலகத்தின் காரியங்களில் இஷ்டம்போல் நடக்கட்டும் என்றிருக்கிறீர்களா?

**எலிசபெத் என்ற ஒரு தாயைக் குறித்து நீங்கள் அறிவீர்கள்.** லூக்.1:5-7 வரை வேதாகமம் இவளைக் குறித்து அழகாய் சாட்சி பகர்கின்றது. "அவர்கள் இருவரும்....கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்" என்று கூறுகிறது. வயது சென்றவளாயிருந்த இவர்களுக்கு கர்த்தர் யோவானைக் கொடுத்தார். இவனைக் குறித்து கர்த்தருடைய தூதன் "பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்" (லூக்.1:17). அந்தப்படியே யோவான், இயேசுவே உலகத்தின் ஒளி என்றும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றும், தான் தேவனுடைய குமாரன் என்றும் சாட்சி கொடுத்து வந்தான். இந்த எலிசபெத் தான் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நடந்து வந்தபடியினால் தன் மகனையும் கர்த்தரைக் குறித்து சாட்சி கொடுக்கும்படி ஒப்புக்கொடுத்தாள். அன்பு தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை கர்த்தரைக் குறித்து சாட்சி சொல்லும்படி ஒப்புக் கொடுத்துள்ளீர்களா?

**இயேசுவின் தாயாகிய மரியாளைப் பாருங்கள்.** மாம்சத்தில் வந்த இயேசுவைப் பெற்றெடுத்த போதிலும் பிதாவின் சித்தத்திற்கு இயேசுவை ஒப்புக்கொடுத்ததோடல்லாமல் தானும் தன்னை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஊழியத்திலே இயேசுவோடு கூட சென்று, "அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்..." (யோவா.2:5) என்று சொல்லி அநேகரை இயேசுவுக்கு நேராய் வழி நடத்தினாள். அதுமாத்திரமல்ல பிதாவின் சித்தம் செய்து

ஊழியம் செய்து வந்த இயேசுவுடனே கூட அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்யும்படி தன்னுடைய மற்ற பிள்ளைகளையும் ஒப்புக்கொடுத்திருந்தாள். "சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின் சென்று ஊழியஞ்செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும்.... அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள் (மாற்.15:40,41). அன்பு தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? அல்லது ஊழியஞ்செய்யும் உங்கள் பிள்ளையிடம் உங்கள் மாம்ச அன்பைக் காட்டி பிதாவினிடத்தில் முழு அன்பு கூர தடையாயிருக்கிறீர்களா? ஒன்றை மறந்து போக வேண்டாம். உங்கள் பிள்ளைகளின் ஆத்துமா கர்த்தருடையது. அவர்கள் கர்த்தருடையவர்கள் (எசேக்.18:4).

**ஐனிக்கேயாள் ஓர் விசுவாசமிகுந்த தாய்.** அவளுக்குள் நிலைத்திருந்த விசுவாசம் அவளுடைய மகன் தீமோத்தேயுக்குள்ளும் நிலைத்திருந்தது. இது குறித்து பவுல் "அந்த விசுவாசம்... உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்" (2தீமோ.1:5) என தீமோத்தேயுக்கு எழுதுகிறான். எனவே தீமோத்தேயு ஒரு உத்தம ஊழியனாயிருந்தான். அன்பு தாயே, உங்களுடைய விசுவாசம் உங்களுடைய பிள்ளைகளுக்குள் நிலைத்திருக்கிறதா? அல்லது இக்காலத்திற்கேற்றவாறு உங்கள் பிள்ளைகளை வளர்க்கின்றீர்களா? பேதுரு, விசுவாசத்தை கூட்டி வழங்கும்படி அறிவுறுத்துகிறார் (2பேது.1:5). உங்கள் பிள்ளைகளுக்கு விசுவாசத்தை கூட்டி வழங்கி அநேக தீமோத்தேயுக்களை உருவாக்குவீர்களா?

எனக்குப் பிரியமான தாய்மார்களே, உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. நாம் நம்முடையவர்களல்ல. அப்படியிருக்க உங்களுடைய பிள்ளைகளும் உங்களுடையவர்களல்ல. எல்லா ஆத்துமாவும் கர்த்தருடையது என அறிகிறோம். கர்த்தரிடத்திலிருந்து இரவலாக பெற்றுள்ள பிள்ளைகளை உலகத்திற்கொத்த வேஷம் தரிக்க வழிநடத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்த்து பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியே நடத்தி பொல்லாங்கனுக்கு நம்முடைய பிள்ளைகளை ஒப்புக்கொடுத்து விடாமல் கர்த்தருக்கே ஒப்புக்கொடுப்போம். மாம்சசிந்தைக்கு இடமளிக்காமல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையைப் பெற்று மேற்கண்ட தாய்மார்களைப் போல் முழுமனதுடனே நம்முடைய பிள்ளைகளை பிதாவின் சித்தத்திற்கு ஒப்படைத்து இம்மையிலும் மறுமையிலும் நாமும் நம்முடைய பிள்ளைகளும் காக்கப்படுவோமாக!

## உண்மையான சபை தோன்றிய வரலாறும்
## பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

### உண்மையான திருச்சபை

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

### பிரிவினைக்கூட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லுத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டாம் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டிரசல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பார்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்.......... | | | |

## இயேசுவை முன் வை
## *Put Jesus First*

உலகம் என்னைச் சுற்றியுள்ளது இப்போ கவர்ச்சியாய் இல்லை:
இதன் இன்பங்கள் வேதனையைக் கொண்டு வருகிறது, இதன் ஞானம் வீணாயிருக்கிறது;
நான் ஒரு நிலையான, உறுதியான அடித்தளத்தை தேடுகிறேன்;
நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.

கர்த்தர் இயேசு மரித்தார் என் இரட்சிப்பு வெற்றிபெற;
அவர் எனக்குப் பதிலாக கல்வாரிக்கு சென்று இரத்தம் சிந்தினார்;
மீட்பு என்னைத் தூண்டியது எல்லா பாவத்தையும் விட்டு விட;
நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.

*-James D.Murch*

# காது

1. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய் - நீதி.4:20
2. கேட்கிற காதும், காண்கிற கண்ணும் ஆகிய இவ்விரண்டையும் கர்த்தர் உண்டாக்கினார் - நீதி.20:12
3. மூடனுடைய செவிகள் கேட்கப் பேசாதே - நீதி.23:9
4. கேட்கிற செவிக்கு ஞானமாய்க் கடிந்து கொண்டு புத்திசொல்லுகிறவன், பொற்கடுக்கனுக்கும் அபரஞ்சிப் பூஷணத்திற்கும் சரி - நீதி.25:12
5. ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும் - நீதி.15:31
6. வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது - நீதி.28:9
7. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை - பிர.1:8
8. காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள் - மத்.10:27
9. கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும் - ஏசா.55:3
10. கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் - வெளி.1:3

## வேதஅறிவுப்போட்டி எண் 95-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| A. ஆனந்த் | -நாகமலை(மதுரை) |
| N. ஜான் செல்லையா | -மதுரை |
| Mrs. மெல்சிடா | -திண்டுக்கல் |
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| K. மோகன் | -கோமாரபாளையம் |
| A. ஜோதிகாந்தம் | -போடபாறை |
| P. பொன்னுசாமி | -வேலூர் |
| G.A. ஜான்சன் | -தோலைமலை |
| G.பூங்கோதை | -கோபி |
| S. பாக்கியராஜ் | -திண்டுக்கல் |
| IRA. எத்திராஜன் | -சங்கரி |
| G.P. ஏசையன் | -கோபி |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (ஆந்திரா) |
| J. ஜாய் வாசுகி | -செட்டிபாளையம் |
| J. நிர்மலாஜான் | -மதுரை |
| R. பாலுச்சாமி | -செட்டிபாளையம் |
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| Mrs. மெர்சி டக்லஸ் | -கோவை |
| N. விஜயநான்த் | -கோ.பாளையம் |
| N.கமலவேணி | - சென்னை |
| S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| N. விஜயநாதன் | -கொ.பாளையம் |
| S.சசி குமார் | -மணலி |
| R. சாமுவேல் | -ஊதியூர் |
| A. ஜோதிகாந்தம் | -போடப்பாறை |

## வேதஅறிவுப்போட்டி எண் 95-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. காரிருளாய் | -மீகா.3:6 |
| 2. தம்மைத்தாமே | -தீத்து2:14 |
| 3. உய்த்து ஆராய்ந்து | -செப்.2:1 |
| 4. பவுல் | -பிலே.10 |
| 5. கரைந்துபோம் | -நாகூம்1:5 |
| 6. விசுவாசத்தை | -1தீமோ.4:1 |
| 7. சேனைகளின் கர்த்தர் | -ஆகாய்2:8 |
| 8. தேவனுக்கு | -2தெச.1:6 |
| 9. புரட்டப்படுகிறது | -ஆபகூக்1:4 |
| 10. பவுல் | -2தீமோ.2:10 |

# தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்
## God Won`t Accept Division

*-Arjunan*




பிரிவினையானது மிக கொடிய நோய்போன்றது. ஆனால் நோய்க்கு மருந்து இல்லாமற்போகலாம். பிரிவினையை முறியடிக்க ஏற்ற மருந்து பரிசுத்த வேதாகமத்தில் உண்டு. "பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்" *(நீதி.18:1)*. பிரிவினையைக் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. ஏனென்றால் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" *(1கொரி.1:13)* ஆனால் நம்மில் அநேகர் நான் அந்த ஊழியனைச்சார்ந்தவன் அந்த குரூப்பில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறேன். உங்களோடு பேசினால் என்னை அவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். அந்தியோகியாவில் உள்ள சீஷர்களுக்கு முதல் முதல் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர் வழங்கப்பட்டபோது நான் பவுலை சேர்ந்தவன் என்றோ அல்லது நான் பேதுருவை சேர்ந்தவன் என்றோ ஒருவரும் சொல்லவில்லை எல்லோரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாகயிருந்தார்கள். இன்றும் நம் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வசனம் இதுதான் "ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26). நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்களுக்குள்ளே பிரிவினை ஆவியும் இருக்காது, பிரிவினை சபையும் இருக்காது.

ஆண்டவர் ஜெபிக்கும்போது "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா.17:22) என்கிறார். தேவன் பிரிந்து இருக்கவில்லை. பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய சித்தத்தை குமாரன் மூலமாகவும் பரிசுத்தஆவியானவர் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் உயிர்த்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என பார்க்கிறோம். அந்த நித்தியத்தில் வாழப்போகும் நாம் பிரிவினையோடு இருந்தால் எப்படி? தாவீது ராஜா பாடும்போது "இதோ, சகோதரர் ஒருமித்துவாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" என்று பாடுகிறார் (சங்.133:1). உண்மைதான் ஒருமித்து வாசம்பண்ணுகிறது மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

பிரிவினைக்கு மூலகாரணமாயிருப்பது பகை. "தன் சகோதரனைப்பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது"(1யோவா.3:15). கொலை என்பது கொடூரமான செயல். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடும் போது, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று


கிறிஸ்துவின் வசன மாத இதழ் வளர்ச்சிக்கு உதவ
முன் வருகிறவர்கள் கவனத்திற்கு
உங்களுடைய உதவியை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது
மணியாடர் மூலமாகவோ THE WORD OF CHRIST என்ற பெயரில்
அனுப்பி வைக்கவும்.



Editor
THE WORD OF CHRIST
P.O.BOX 5, Batlagundu-624 202,S.INDIA. 04543-263278


## பொது அறிவு சோதனை

1. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
   அ. 500கிலோ மீட்டர் ஆ. 150 லட்சம் கிலோ மீட்டர்
2. ஜப்பான் நாட்டில் டிரைவரே இல்லாமல் ஓடும் ரெயிலின் வேகம் மணிக்கு எத்தனை கிலோ மீட்டர்?
   அ. 200 கிலோ மீட்டர் ஆ. 530 கிலோ மீட்டர்
3. இந்தியாவின் பரப்பளவு எவ்வளவு?
   அ. 5,000,000சதுர கிலோ மீட்டர் ஆ. 3,287,263சதுர கிலோ மீட்டர்
4. இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் எங்கு உற்பத்தியாகின்றன?
   அ. சதையில் ஆ. எலும்புகளின் உட்பகுதியில்
5. மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
   அ. பூனை ஆ. சிங்கம்

1. ஆ. 150 லட்சம் கிலோ மீட்டர், 2. ஆ. 530 கிலோ மீட்டர், 3. ஆ. 3,287,263சதுர கிலோ மீட்டர், 4. ஆ. எலும்புகளின் உட்பகுதியில், 5. ஆ. சிங்கம்

## நடப்புச் செய்திகள்

☆ உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் பெண் சிஇஓக்களில்முதலிடத்தை இந்தியாவை சேர்ந்த நூயி பெற்றுள்ளார். ஆண்டுக்கு 55கோடி

☆ நாடு முழுவதும் மாணவர்களுக்கு மிக மலிவாக ரூ400 விலையில் லேப்டாப்கள் வழங்குவதற்கு மத்திய அரசு புதிய திட்டமிடப்பட்டுள்ளது.

☆ தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றியதலைவர்களுக்கு 385 டாடா சுமோ கார்களை முதல்வர் கருணாநிதி வழங்கியுள்ளார்.

கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப் பான்"(மத்.5:21,22)என்று கர்த்தர் உரைக்கிறார். முன்னே கொலை செய்தால் தான் குற்றம் ஆனால் தற்போது நியாயமில்லாமல் கோபித்துக்கொண்டாலே குற்றம் என்று வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்வதோ, மூடன் என்று சொல்லுகிறதோ மாபெரும் தவறாக இருக்கிறது. மேலும் "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?"(1யோவா.4:20). இங்கே தன் சகோதரனைப் பகைக்கிறவன் பெய்யன் என திருமறை விளக்குகிறது. திருமறை ஒருக்காலும் பொய்யுரையாது என்பது நாம் அறிந்த உண்மை. ஆக சகோதரனைப் பகைக்கிறவன் பெய்யனாயிருக்கிறான் அவனுக்குள் சத்தியம் இல்லை. சத்தியம் இருக்குமேயானால் பொல்லாங்கனுக்குள், அதாவது முழுவதும் பாவத்தில் கிடக்கும் பாவியை எப்படி மன்னித்து கிறிஸ்து ஏற்றுக்கொள்கிறாரோ, அதே சிந்தை அவனுக்குள்ளும் இருக்கும்.

தேவ சமூகத்தில் காணிக்கை செலுத்த வரும்போது "உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைக் செலுத்து"(மத்.5:23,24). கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை சொலுத்து என்கிறார். இவ் வசனத்தை யாருக்கோ சொன்னதுபோல அனேகர் எடுத்துக்கொண்டு மெத்தனமாக இருந்து விடுகின்றனர். "இப்பபடியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளி யென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிற தென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே"(ரோம.14:10). தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும். கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை. அதைவிடுத்து அதற்கு வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு காலத்தை தள்ளுவோமானால் நியாயத்தீர்ப்புக்கு எப்படி தப்புவோம்? அவருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும். பிரிவினை பாதளம் வரை செல்லும் ஐக்கியம் அன்பு இருக்கும் இடமட்டும் செல்லும். எதை நாடப்போகின்றீர்கள்? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# மதங்கள்! மாயப்பூக்கள்!!

## RELIGIONS! FLOWERS OF VANITY!!

*-Peter Solomon*

நெருங்கிப் பார்த்தால் மணமுமில்லை! நிறமுமில்லை! மதங்கள் வெற்றுக்குடங்கள்! எட்டிப் பார்த்தால் உள்ளே எதுவுமில்லை. மகுடிக்கு நாகம் நடனமாடுமென்பர்! உண்மையில் மகுடியின் நாதத்திற்கு ஆடாமல், மகுடியின் சுழற்சிக்குக் கூர்மைப்பார்வை கொண்ட நாகம் "எப்படிக் கொத்தலாம்" என்று ஆடுகிறது. இன்றைக்கு மதங்கள் இரசாயனப் பேரழிவை, பயங்கரவாதங்களை கட்டவிழ்த்து விடுகின்றன. இவைகளின் ஆட்டங்கள் கொத்தும் நாகத்திற்கு சமமானவைகள்!

தாத்தாவின் முதுகிலே பேரன் யானை ஏற்றம் ஏறி, வீட்டின் மூலை எல்லாம் வலம் வந்து கொண்டிருந்தான். "இன்றைக்கு மதங்களும் மனிதனை மண்டியிடச் செய்து" அவன் முதுகில் யானைஏற்றம் ஏறி, அவன் முழங்காலை உடைத்து நிரந்தர நொண்டியாக மாற்றி விடுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளில் ஏறக்குறைய "எல்லா மதங்களுக்கும் மதம் பிடித்தது" என்று சொன்னால் மிகையாகாது. அவைகளை அடக்குவதற்கு "அங்குசமின்றி" தவிக்கிறது இன்றைய உலகம்! போதாக்குறைக்கு மதவியாபாரிகள் இன்றைக்கு உச்சநிலையை அடைந்துவிட்டனர். அவர்களுடைய கற்பனையின் வியாபாரத்துக்கு அளவேயில்லை!

இவர்களின் தந்திரச்சொற்களுக்கும், மந்திர வார்த்தைகளுக்கு முன், மாநில முதல்வர் முதற்கொண்டு நாட்டின் பிரதம மந்திரி வரை, இவர்கள் காலடியில் மண்டியிடுகின்றனர். வேடிக்கையென்னவென்றால், விண்ணுக்குக் கலம் அனுப்புவர்களும் அவர்களுக்குச் சலாம் அடிக்கின்றனர்!

மனிதன் மயக்கம் அடையும் போது அவனுக்கு
உயிர் இருக்கும், அறிவு இருக்காது!
கண் இருக்கும், பார்வை இருக்காது!
செவி இருக்கும், கேட்கும் திறன் இருக்காது!
உடல் இருக்கும், உணர்வு இருக்காது!

இன்றைய மத மயக்கங்களும் இந்த வகையைச் சார்ந்ததே! அவனுக்கு திருமுழுக்கு அளித்து, தட்டியெழுப்ப சுவிசேஷமாகிய நற்செய்தி வராதவரை மயக்கம் தெளியாது 2தீமோ.2:26.

மயக்கத்திலே கொடிய நிலை எல்லா மதங்களையும் ஒன்றாகப் பாவிப்பது; எந்த மதத்திலும் உறுதியில்லாமல் போன மனிதன், புயல்காற்றில்சிக்கிய படகுக்கு ஒப்பாயிருக்கிறான். ஏனென்றால் திசையுமில்லை; அவனுக்கு கரையுமில்லை;

சமீப காலத்தில் மனிதனை வஞ்சிக்கும் ஆசிரமங்கள் புற்றீசலைப் போல தோன்றி விட்டன. பல ஆசிரமசுவாமிஜிகள் நீதி மன்றங்களால் கொலை, கொடுமை, கொள்ளை, கொடும்பாலியல் போன்ற குற்றங்களுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஜென்ம தண்டனைகளைப் பெற்றிருப்பது மிக ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

உண்மையில் ஆசிரமங்கள் மனித .சிரமங்களாக மாறிவிட்டன! அதின் உள்ளே போன எல்லாருமே திரும்பி வருவதில்லை! திரும்பி வந்தாலும் அவன் வேற்றுக்கோளிலிருந்து வந்த மனிதனைப்போல வேதாந்தம் பேசுகிறான்!

உணவு, உடை, உறைவிடம் மனிதனின் அடிப்படைத் தேவைகள். இவைகள் இறைவனுக்குச் சித்தமானால் விண்ணிலிருந்தும் வரமுடியும் மண்ணிலிருந்தும் பெறமுடியும்!

உழைப்பு, ஒழுக்கம், ஒய்வு சுழற்சிமுறையில் "இந்த மண்ணிலேயே வெண்ணிலாவையும் அறுவடை பண்ணலாம்!"

இதையெல்லாம் விட்டு விட்டு மனிதன் மதமயக்கங்களில் சிக்கி, மீளாத கோமாவில் இருக்கிறான் எனச்சொல்லலாம். உண்மையிலேயே,


1. ஆசிரமங்கள்! மனப்பயிற்சிக் கூடங்கள்!
2. மனமுறிவின் சின்னங்கள்!
3. பணங்களை வசூலிக்கும் நகராட்சிகள்!
4. வயதானவர்களின் சபலக் கட்டில்கள்!

யாரை நினைத்தோ சமாதியைச் சுற்றி வரும் ஒப்பாரிகளை எண்ணிப்பாருங்கள்! உலகமே ஆசிரமமானால், உழைக்காத இந்த உலகத்திற்கு உடை, உணவு, உறைவிடமேது? மயக்கத்தில் உளறுபவனுக்கும், மதமயக்கத்தில் இருப்பவனுக்கும் வித்தியாசமே இல்லை!

**திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டில் நடைபெற்ற 31வது கிறிஸ்துவின் வசனம் வாசகர் கருத்தரங்கு**

தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

JULY



2008

THE WORD OF CHRIST

**தமிழகத்தின் பலமாவட்டங்களிலிருந்து வருகை தந்து கருத்தரங்கை சிறப்பித்த வாசகர்கள் மற்றும் தேவஊழியர்கள்**

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -10

சரித்திர ஆய்வு

சர்வலோக நியாயாதிபதி: தேவன்,கர்த்தர்,மற்றும் நாம்.

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



*மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டு அவன் முடிவு பரியந்தம் அவன் செய்த தவறுகளை சுட்டிக் காட்டவும், விசாரிக்கவும், தண்டிக்கவும் நீதியான பரிசுத்தர் ஒருவர் தேவை என்பதை அறிந்ததினால் முதன் முதலில் ஆபிரகாம் அவரை* ***சர்வலோக நியாயாதிபதி"*** *நீதி செய்யாதிருப்பாரோ என்றான் (ஆதி.18:25). இன்றைக்கு சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த உலகின் எல்லா இன, மத மக்களின் தந்தை* ***ஆபிரகாம்*** *கடவுளாட்சியில் (THEOLRACY) நம்பிக்கையுள்ளவனாய் வாழ்ந்தான். ஆனபடியினாலே, தான் விசுவாசிக்கும் தேவனை சர்வலோகத்தின் (மக்களின்) நியாயாதிபதியாக கருதினான்.*

*வேதாகமத்தில் நியாயாதிபதிகள் (நீதிபதி) சவுல் ராஜாவாக நியமிக்கப்படுவதற்கு முன்பாக 350 ஆண்டுகள் நியாயம் விசாரித்து வந்தனர். இவர்கள் நீதி நேர்மையுள்ளவர்களாகவும், வழக்குகளை நன்கு ஆராய்ந்தறிந்து நீதி வழங்கியும் இராணுவ படையின் அதிகாரத்தை போல் நீதி வழங்கும் இம் முறையை மோசேயின் மாமனார் மற்றும் மோசேயினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த யாத்.18:20-22 "நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக" லேவி.19:15. "உங்கள் சகோதரருக்கும்... அந்நியனுக்கும் நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள்" உபா.1:16. "...நீங்கள் செய்கிற காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்... கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள். நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார். கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, ...கர்த்தரிடத்திலே அநியாயமும் முக தாட்சிணியமும் இல்லை. பரிதானமும் அவரிடத்தில் செல்லாது" (2நாளா.19:6,7).*

*அநீதியுள்ளவர்களைக் குறித்து 1சாமு.8:3; ஏசா.1:23; நீதி.17:15;24:24; ஏசா.10:1,2 அறியலாம்.*

*தேவனால் தேவ சாயலாக உண்டாக்கப்பட்ட ஆதாம், ஏவாள் தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமையினால் பாவ, சாபத்துக்குள்ளாயினர்.*

பரிசுத்த தேவனுடன் பாவியான மனிதன் ஒன்றாக சேர்ந்து வாழ இயலாது, அவனின் பாவத்தை மூடுவதற்காக பலிசெலுத்தி, அவன் நிர்வாணமாய் இல்லாதிருக்க (உலகின் முதல் தையற்காரரான தேவன்) அவர்களுக்கு தோலாடையை உண்டாக்கி கொடுத்ததுமல்லாமல் ஏதேனிலிருந்து (இன்பம்) வெளியே அனுப்பப்பட்டவர்களின் நல் வாழ்வில் நாட்டம் கொண்டும், கொடிய மிருகங்கள் அவர்களை தாக்காமலிருக்க அவர்களுக்கு தேவன் பத்திரமான, பாதுகாப்பான வீட்டையும் அளித்தார் (மற்றவர்கள் கூறுவதுபோல் அவன் மிருகங்களிடையே மிருகமாக வாழாமல் நாகரீகமான (காட்டு மிராண்டியாக அல்ல) தேவ மனிதனாகவே இருக்கவும், தேவனை தொழுதுகொள்ளவும், ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் தேவனோடு ஐக்கியமாக அன்பாக இருக்க அவன் கடைபிடிக்க வேண்டிய தொழுதுகொள்ளுதலை அவர்கள் அறிந்திருந்தும் ஆதாம், ஏவாளின் முதல் மகன் தேவ வழியை விட்டு தன் புத்தியினால் சொந்த வழியில் தேவனை பிரியப்படுத்தும் வாயிலாக தேவ கட்டளையை மீறி தன் பாவ நிவர்த்திக்காக பலிசெலுத்தாமல், நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டுவந்தான் ஆதி.4:3. ஆனால் அவன் தம்பியோ (ஆபேல்) தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான் அவன் காணிக்கையை கர்த்தர் அங்கிகரித்தார். ஏனெனில் தேவ கட்டளையான.. ஆத்துமாவிற்காகப் பாவ நிவர்த்திசெய்கிறது இரத்தமே" (லேவி.17:11). "...இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" எபி.9:25. என்பதை கேட்டறிந்த ஆபேலையும், அவன் செலுத்திய காணிக்கையையும் தேவன் அவனையும் அவன் காணிக்கையையும் ஏற்றுக்கொண்டு அவனை ஆசீர்வதித்தார். ஆனால் காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக்கொள்ளாததினால் அவன் எரிச்சலடைந்து அவன் முக நாடி வேறுபட்டது (வசனம்5) என்ற போதிலும் கர்த்தர் காயீன் தன் சொந்த வழியை விட்டு தேவ வழியில் திரும்பச்செல்லாதிருந்த போது அவனை தண்டிக்காமல், "...நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் **வாசற்படியில்** படுத்திருக்கும், அவன் ஆசை உன்னைப்பற்றிக் கொள்ளும் (வசனம்7) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட முதல் குடும்பத்தினர் காட்டிலோ, குகையிலோ அல்லது வேறு எங்கேயோ தங்காமல் தேவனால் உண்டாக்கிக் கொடுக்கப்பட்ட **வீட்டின் வாசற்படியில்** யாருக்கு இடம் கொடுத்தான்? ஒரு வீட்டின் பாதுகாப்பு வாசற்படிதான், அங்கே தானே நாம் நமது முடிவை சந்திக்கலாம். காயீன் தன் வாசற்படியில் பாவம் படுத்திருக்கிறதை உணராமல் இருந்ததுமல்லாமல், தன் சகோதரனை வயல் வெளியிலே கொன்று போட்டான் (FIRST FRATRICIDE). அன்பு தேவபிள்ளையே இன்று உன் தேவனாகிய நியாயாதிபதி உன் வீட்டின் வாசற்படியில்

நிற்கிறார் யாக்.5:9. உன் செயலை அறிந்த தேவன் உன்னை சந்திக்க வருகிறார். அவருடன் காயீனின் பாவ, சாப தண்டனையும், ஆபேலின் ஆசீவாத ஜீவனும் வருகிறதே. இவைகளில் நீ பெறப் போவது எது? இன்றே தீர்மானம் செய். (ரோ.2:1-3-ன்படி .... நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ? வேதாகம போதனையின்படி கிறிஸ்து உலகை நியாயம் தீர்ப்பாரே!

"கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசா.33:22; 11:4; 32:1) கி.மு.713 கூறிய தீர்க்கதரிசனம். அக்டோபர் 29 கி.பி-யில் நிறைவேறியது. "... நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் (பிதாவானவர்) குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" யோவான்5:22. "நான் என் (இயேசு) சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது (5:30). மேலும் "அவர் (இயேசு) மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" வசனம்27. அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியால்" எபி.9:27. "...உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**....2தீமோ.4:1. மேலும் **கர்த்தர்** தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து ... தம்முடைய **ஊழியக்காரர்மேல்** பரிதாபப்படுவார்" உபா.32:36.

இந்தியா விடுதலை பெற்ற நாள்முதல் இன்றுவரையில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக (Judge) ஒரு **கிறிஸ்தவரும்** நியமிக்கப்படவில்லை ஏன் என்பதை நாம் எண்ணி ஏமாற்றம் அடைந்திருக்கிறோம். ஆனால் **இஸ்ரயேல்** மக்களின் நியாயாதிபதிகளில் முதல் நியாயாதிபதியும் முதன்மையான நியாயாதிபதியாகிய காலேபின் தம்பி கேனாசுவின் குமாரனாகிய ஒத்னியேல் நியா.3:9-11; 1:13; யோசு.15:17; 1நாளா.4:13) கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, போன்றவர் தேவனையும் அவர் வல்லமையையும் கண்டு விசுவாசித்தபடியால் அவர்களின் பெயர் விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது எபி.11:32. நாமும் அவர்களைப் போல் வாழ்ந்து இயேசு கிறிஸ்துவை பின்பற்றினால் ".... என்னைப் பின்பற்றின நீங்களும், ....நியாயந்தீர்க்கிறவர்களாய் ... சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பீர்கள்"_மத்.19:28. சிங்காசனம் ஆயத்தமாயிருக்கிறது. நீ ஆயத்தமாயிருக்கிறாயா? சகோதரனே, சகோதரியே சிந்தித்து செயல்படு சிங்காசனத்தண்டையில் சந்திப்போமா?

சிறுவர் பகுதி

# உலகத்தைக் கலக்குகிறவர்கள்

## வேதபகுதி: அப்போஸ்தல நடபடிகள்17:1-10



ஊரைச் சுற்றுகிறவர்களை பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் இன்று உலகத்தைக் கலக்குகிறவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளப் போகிறோம். அவர்கள் யார் என்று தெரியுமா? வேறு யாரு பவுலும் சீலாவுந்தான். கலக்குகிறவர்கள் களங்கப்படுத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் சுவிசேஷத்தினாலே உலகத்தை கலக்குவதாக இயேசுவை விசுவாசியாத யூதர்கள் வைராக்கியம் கொண்டு இவர்கள் மீது குற்றஞ்சுமத்தினார்களாம்.

இந்த இரண்டு தாசர்களுடைய வேலை என்னவென்றால் செல்லுமிடமெங்கும் சுவிசேஷத்தை அறிவிப்பது அநேகரை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவது. ஒரு முறை அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்து அங்குள்ள யூதருடைய ஜெப ஆலயத்தில் போய் மூன்று ஓய்வுநாட்களில் இயேசுவை பற்றி பிரசங்கித்தார்கள். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். சத்தியத்தை நம்புகிறவர்கள் சத்தியத்தை பிரசங்கிக்கிற கூட்டத்தில் இருப்பார்கள் அல்லவா!

எல்லா இடங்களிலும் நல்லவர்கள் இருந்தாலும் அங்கும் சில தீயவர்கள் இருப்பார்கள். அதைப்போல பவுல் பிரசங்கித்த இடத்தில் சில தீயவர்கள் இயேசுவை விசுவாசியாமல் இவர்களுக்கு விரோதமாக கூட்டத்தை சேர்த்துக் கொண்டு பவுலையும் சீலாவையும் ஏற்றுக்கொண்ட யாசோனையும் சில சகோதரர்களையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு வந்து. இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டார்கள். இதைக் கேட்டவர்கள் யாசோனிடத்தில் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டு விட்டார்கள். பின்பு பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்திற்கு அனுப்பி விட்டார்கள். அவர்கள் அங்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

ஊரைச்சுற்றி ஊதாரியாய் போனான் என்று பலர் உங்களை சொல்லியிருப்பார்கள் பரவாயில்லை. இனிமேலாவது உலகத்தை கலக்குகிற இந்த பவுல் சீலாவைப்போல வருங்காலத்திலே மாறுவதற்கு பிரயாசமெடுத்து ஒழுங்காக ஞாயிறு பள்ளிக்குச் செல்லுங்க, கர்த்தர் அதற்குரிய ஞானத்தையும் பெலத்தையும் உங்களுக்கு தருவார். குட்டையை கலக்கினால் மீன்கள் மிதக்கும், உலகத்தைக் கலக்கினால் ஆத்துமாக்கள் கிடைக்கும். நீங்கள் வருங்காலத்தில் கலக்குவீர்களா?

**மனப்பாட வசனம் :** "தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்" (நீதி.25:25)

## வேத அறிவுப் போட்டி எண்.96


***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. வேதத்தையும் சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலமாய் முந்தின தீர்க்கதரிசிகளைக்கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளையும் கேளாதபடிக்குத் தங்கள் இருதயத்தை எப்படி ஆக்கினார்கள்?
2. அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது என்னசெய்திருக்கிறார்?
3. துன்மார்க்கரின் கிரியைக்கு வருவதுபோல, நீதிமான்களுக்கும் வரும்; நீதிமான்களின் கிரியைக்கு வருவதுபோல, துன்மார்க்கருக்கும் வரும்; இதுவும் என்னவென்று பிரசங்கி சொல்லுகிறார்?
4. நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் என்ன செய்யாது?
5. நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் எப்படிப்பட்டவர்?
6. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும்படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக எப்படிப்பட்ட பக்தியாயிருக்கிறது?
7. துன்மார்க்கன் வர அவமானம் வரும்; அவமானத்தோடே எதுவும் வரும்?
8. தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்: அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எப்படிபோம்?
9. உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன்; அதனோடுகூட நீங்களும் என்ன ஆவீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்?
10. உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி எவருக்கு மகிமையைக் கொடுத்தார்?

**"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்"**
**(யோவா 17:3).**

**BATLAGUNDU CHRUCH OF CHRIST** **ஆராதனை நேரம்**



ஞாயிறு காலை 8.30 மணி

தேவனை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

17-2-102 D/5, Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dist

Meets Here

**உங்கள் வானொலியில்** இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**

TAMILAN TV - Every Monday 6.00 a.m. VASANTH TV - Every Tuesday 6.30 a.m.
IMAYAM - Every Thursday 6.15 a.m.

**மாத இதழ் மற்றும் வேதபாடம்** தேவைக்கு உடனே ரூ. 15/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

Radio &TV யில் வெளி வந்த தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

## THE WORD OF CHRIST

P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041
E-mail : thewordofchrist@sancharnet.in

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**மாத இதழின் ஆண்டு சந்தா**

இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24, Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan

Registered with Registrar of Newspapers for India under No. TN/SR- 164/ 2006-2008 Licensed to Post without prepayment License No. TN/WPP-25/SR/ 2006 - 2008 Posted at Batlagundu Post Office 10th August 2008

To

**Monthly Magazine**

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India